## சமூகம் நினைத்துக் கொண்டிருப்பதைவிட

# மதிப்புமிக்கவர் கலைஞர்!

## கவிப்பேரரசு வைரமுத்து புகழாரம்!





மாண்புமிகு
முதலமைச்சரைச் சந்தித்தேன்

வெளிநாட்டுப் பயணத்துக்கு
வாழ்த்தும்
கலைஞர் படைப்புகளின்
நாட்டுடைமைக்கு
நன்றியும் தெரிவித்தேன்

கலைஞர் நூற்றாண்டு
நினைவு நாணயத்தை
எனக்கவர் பரிசளித்தார்;
மகிழ்ந்து போனேன்

வீட்டுக்கு வந்ததும்
கலைஞர்
எனக்களித்த பேனாவுக்குப்
பக்கத்தில் வைத்துப்
பத்திரப் படுத்தினேன்

கலைஞருக்கும்
இந்த நாணயத்துக்கும்
ஓர் ஒற்றுமை உண்டு

35 கிராம் எடைகொண்ட
இந்த நாணயம்
50 விழுக்காடு வெள்ளி
40 விழுக்காடு பித்தளை
5 விழுக்காடு நிக்கல்
5 விழுக்காடு துத்தநாகம்
கொண்டது

இதன் இந்திய மதிப்பான
100 ரூபாயைவிட
இதன் தயாரிப்புச் செலவு
கூடுதல் மதிப்புடையது

அப்படித்தான்...

இந்தச் சமூகம்
நினைத்துக்கொண்டிருப்பதைவிடக்
கலைஞரும் மதிப்பு மிக்கவர்

**கவிப்பேரரசு வைரமுத்து**



---

கோவை சுப்பு நிகழ்ச்சி ஏற்பாட்டில் -

## வேலூரில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு புகைப்படக் காட்சி!

### முனைவர் கோ.விசுவநாதன் தலைமை! ஆர்.எஸ்.பாரதி திறந்து வைக்கிறார்!

வேலூர், ஆக. 25-

தமிழியக்கம் வி.ஐ.டி. பல்கலைக் கழகம் இணைந்து வழங்கும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு காலச்சுவடு (புகைப்படக் காட்சி) தொடக்க விழா இன்று (25.8.2024 - ஞாயிறு) காலை 8.30 மணி சி.எஸ். அரங்கம், வி.ஐ.டி. பல்கலைக் கழகம், வேலூரில் நடைபெறுகிறது.

தமிழியக்கம் நிறுவுநர் - தலைவர் வி.ஐ.டி. பல்கலைக் கழகம் நிறுவனர் - வேந்தர் முனைவர் கோ. விசுவநாதன் தலைமை வகிக்கிறார்.

மாநிலங்களவை மேனாள் உறுப்பினரும் கழக அமைப்புச் செயலாளருமான ஆர்.எஸ்.பாரதி புகைப்படக் காட்சியை திறந்து வைத்து வாழ்த்துரையாற்றுகிறார்.

தமிழியக்கம், வி.ஐ.டி. பல்லைகக் கழகம் இணைந்து வழங்கும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டிக் கோவை ஒளி ஓவியர் போட்டோ சுப்பு ஒருங்கிணைப்பிலும் நிகழ்ச்சி ஏற்பாட்டிலும் முத்தமிழறிஞர் கலைஞரின் வரலாறு கூறும் இப்படக்காட்சியினை 25.8.2024 காலை 8.30 மணி முதல் 26.8.2024 மாலை 6.00 மணி வரை அனைவரும் காண வருமாறு தமிழியக்கம் வி.ஐ.டி. பல்கலைக் கழகம் கேட்டுக்கொண்டுள்ளது.

---

சென்னை தென் மேற்கு மாவட்ட

## பகுதிச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை, ஆக.25-

சென்னை தென்மேற்கு மாவட்டக் கழகச்செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை தென்மேற்கு மாவட்ட பகுதிச்செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நாளை (26.08.2024 - திங்கள்கிழமை) மாலை 6.00 மணியளவில் சி.பி.ராமசாமி சாலையில் உள்ள அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் அ.சந்திரசேகர் தலைமையில் நடைபெறவுள்ளது.

எனவே இக்கூட்டத்தில் மாவட்ட நிர்வாகிகள், பகுதிச்செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: தலைவர் தலைமையில் நடந்த மாவட்டச்செயலாளர் கூட்டத்தின் தீர்மானங்கள் குறித்தும் மற்றும் கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வேண்டுகோள் விடுத்துள்ளார்.

---

மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. சிறப்புரை! க.செல்வம் எம்.பி. பங்கேற்பு!

## மதுராந்தகம் நகரக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### நகரச் செயலாளர் கு.குமார் அறிக்கை!

காஞ்சிபுரம், ஆக.25,

மதுராந்தகம் நகரக் கழகச் செயலாளர் கு.குமார் எம்.சி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், மதுராந்கதம் நகரக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (25.8.2024 ஞாயிற்றுக்கிழமை) காலை 11 மணிக்கு ஏ.கே.திருமண மண்டபம், மதுராந்தகத்தில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு நகரக் கழக அவைத் தலைவர் பொன்.கேசவன் எம்.சி. தலைமை வகிக்கிறார். நகரக்கழகதுணைச்செயலாளர் மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் ஆர்.பரணி எம்.சி., வரவேற்றுப்பேசுகிறார். நகரப் பொருளாளர் என். சங்கர், நகர துணைச் செயலாளர் எம்.என்.மூர்த்தி, எம்.சி., நகர துணைச் செயலாளர் கே. கோமதி , நகர துணைச் செயலாளர் சி. கிருஷ்ணன், மாவட்டப் பிரதிநிதிகள் டி.கே.ராஜ, கே. ஏழுமலை, எம்.ராஜா, கே.குருமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக் கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

இதில் க.செல்வம் எம்.பி., நகர் மன்றத் தலைவர் கு.மலர்விழி, எஸ்.டி.பிரேம் சந்த், கி.சிவ லிங்கம், மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

அது போது, கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா, கழகத்தின் பவளவிழா மற்றும் முப்பெரும் விழா, 2026 தேர்தல் பணி சம்பந்தமாக ஆலோசிக்க இருப்பதால், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நகர மன்ற உறுப்பினர்கள், கிளைக் கழக செயலாளர்கள், மேலவை பிரதிநிதிகள் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், செயகுழு உறுப்பினர்கள், கழக முன்னோடிகள், கழகத்தோழர்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு நகரக் கழகச் செயலாளர் கு.குமார் எம்.சி. கேட்டுக் கொண்டுள்ளார்.

---

தி.மு.க. பொறியாளர் அணி செயலி - புத்தகம் வெளியீடு!

## பொறியாளர் அணி சார்பில் - கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா!

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் – பரிசளித்து விழாப் பேருரை!

திருவண்ணாமலை, ஆக. 25 -

தி.மு.க. தலைவர் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஒவ்வொரு அணிகளுக்கும் ஒரு பணியை வழங்கினார். அதன்படி தி.மு.க. பொறியாளர் அணிக்கு மாநிலம் முழுவதும் உள்ள பொறியியல் கல்லூரி மாணவ மாணவிகளுக்கு பேச்சுப்போட்டி நடத்தி அதன் இறுதி விழாவை சென்னையில் நடைபெறவேண்டும் என உறுதி செய்யப்பட்டது. தலைவர் ஆணையை ஏற்று தி.மு.க. பொறியாளர் அணி ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியிலும் அப்போட்டி நடத்தப்படவேண்டும் என முடிவு செய்யப்பட்டு சுமார் 200 சட்டமன்ற தொகுதிகளில் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து மண்டல வாரியாக அரை இறுதி போட்டியினை மிக பிரம்மாண்டமாக பல்லாயிரக் கணக்கான பொறியியல் மாணவர்கள் முன்னிலையில் நடத்தி அதில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 26 மாணவர்களுக்கு இன்று (25ஆம் தேதி-ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணி அளவில் சென்னை கலைவாணர் அரங்கில் இறுதி போட்டி நடைபெறவுள்ளது.

இதனை தொடர்ந்து தி.மு.க. பொறியாளர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா இன்று (25.08.2024 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 4 மணியளவில் சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற உள்ளது. இதில் பொறியாளர் அணி செயலி மற்றும் செயல் திட்ட வெளியீட்டு விழா, எஸ்.கே.பி.கருணா எழுதிய "கலைஞர் கட்டிய தமிழ்நாடு" புத்தக வெளியீட்டு விழா, மாநில அளவில் பேச்சுப்போட்டியில் வென்ற மாணவர்களுக்கு பரிசளிப்பு விழா ஆகியவை நடைபெற உள்ளது.

காலை 10 மணியளவில அனைத்து மண்டலங்களிலும் பேச்சுப்போட்டியில் தேர்வு பெற்ற மாணவர்களுக்கான இறுதி போட்டி நடக்கிறது. நிகழ்ச்சிக்கு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமை தாங்குகிறார். மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மத்திய சென்னை எம்.பி. தயாநிதிமாறன், இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை ஆகியோர் பரிசளித்து வாழ்த்துரை வழங்குகின்றனர்.

நிகழ்ச்சியில் சென்னை மேற்கு மாவட்டச் செயலாளரும், சென்னை மாநகராட்சி நிலைக் குழு (பணிகள்) தலைவர் நே.சிற்றரசு, சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம், சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர், சென்னை தென் மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு மற்றும் தலைமைக் கழக நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

தொடர்ந்து மாலையில் நடைபெறும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவிற்கு கழக துணை பொதுச் செயலாளரும், உயர் கல்வித்துறை அமைச்சருமான க.பொன்முடி தலைமை தாங்குகிறார். பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் கதர் கிராம தொழில் வாரிய துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் முன்னிலை வகிக்கிறார். கழக துணை பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. "கலைஞர் கட்டிய தமிழ் நாடு" புத்தக அறிமுக உரையாற்றுகிறார்.

விழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொறியாளர் அணிசெயலி மற்றும் புத்தகத்தை வெளியிட்டு, வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசளித்து விழா பேருரையாற்றுகிறார்.

இதில் கழக நிர்வாகிகள், தொண்டர்கள் பலர் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

---

தி.மு.க. மகளிர் தொண்டர் அணி

## விருதுநகர் வடக்கு மாவட்டம் சிவகாசி மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்

### தி.மு.க. மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ப.இராணி அறிவிப்பு

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு விருதுநகர் வடக்கு மாவட்டம், சிவகாசி மாநகர அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**சிவகாசி மாநகரம்**

**தலைவர் :** மங்களம், வெல்லஞ்சாமியார் தெரு, சிவகாசி.

**துணைத் தலைவர் :** சூரத் பானு, சீதக்காதி தெரு, சிவகாசி.

**அமைப்பாளர் :** தமிழரசி, பள்ளப்பட்டி ரோடு, திருத்தங்கல்.

**துணை அமைப்பாளர்கள்** : 1.வசந்தி, பிள்ளையார் கோவில் தெரு, திருத்தங்கல். 2.கலைச்செல்வி, திருப்பதி நகர், திருத்தங்கல். 3.சாந்தி, நா.பா.வீதி, திருத்தங்கல். 4.அமுதா, ஜவஹர்லால் தெரு, சிவகாசி. 5.குருலெட்சுமி, பராசக்தி காலனி, சிவகாசி.

**வலைதள பொறுப்பாளர்கள்** 1.ஜெயஸ்ரீ, செங்கமல நாச்சியார்புரம் ரோடு, திருத்தங்கல். 2.ராமுபிரியா, பாண்டியன் நகர் 6வது தெரு, திருத்தங்கல்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 24.08.2024

**நாமக்கல் ப.இராணி**
செயலாளர்,
தி.மு.க. மகளிர் தொண்டர் அணி

---

மாங்காடு நகரத்தில் - இன்று

## இல்லந்தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்த்தல்!

### பட்டூர் எஸ்.ஜபருல்லா – ஆர்.சாரதி அறிக்கை!

காஞ்சிபுரம், ஆக. 25-

மாங்காடு நகரச் செயலாளர் பட்டூர் எஸ். ஜபருல்லா, நகர இளைஞர் அணி அமைப்பாளர் ஆர். சாரதி ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், மாங்காடு நகரத்தில் மாநில இளைஞர் அணி செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கினங்கவும், மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவுறுத்தலின்படி இல்லந்தோறும் இளைஞர் அணி உறுப்பினர்கள் சேர்த்தல் பணி கீழ்க்காணும் நாட்களில் நடைபெற உள்ளது. இப்பணியை மேற்பார்வையிட தலைமை பொதுக்குழு உறுப்பினர் கே.எத்திராஜ் வருகை தர உள்ளார்.

எனவே அந்த அந்த வார்டு கழக செயலாளர்கள் தங்களுக்கு ஒதுக்கி உள்ள நாட்களில் அனைத்து கழக தோழர்களுக்கும் இளைஞர் அணி தம்பிமார்களுக்கும் முன்கூட்டியே தெரிவித்து சிறப்பான முறையில் இந்நிகழ்ச்சியினை நடத்தி தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இன்று (25.8.2024 - ஞாயிற்றுக்கிழமை) காலை 9.30 மணியளவில் 1வது வார்டிலும், காலை 10.30 மணியளவில் 2வது வார்டிலும், காலை 11.30 மணியளவில் 3வது வார்டிலும், காலை 12.30 மணியளவில் 4வது வார்டிலும், மாலை 4.30 மணியளவில் 14வது வார்டிலும், மாலை 5.30 மணியளவில் 18வது வார்டிலும், மாலை 6.30 மணியளவில் 21வது வார்டிலும் உறுப்பினர் சேர்த்தல் நடைபெறுகிறது.

குறிப்பு : 1. மற்ற வார்டுகளின் விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

2. 15 வயதிலிருந்து 35 வயது வரை உள்ளவர்கள் மட்டும் உறுப்பினராக சேர்க்கப்படுவார்கள்.

3. 15 முதல் 18 வயது வரை உள்ளவர்கள் ஆதார் அட்டையும், 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் வாக்காளர் அட்டையும் கொண்டு வரவும்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

---

தி.மு.க. மகளிர் அணி

## விருதுநகர் வடக்கு மாவட்டம் சிவகாசி மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### தி.மு.க. மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு விருதுநகர் வடக்கு மாவட்டம் சிவகாசி மாநகர தி.மு.க. மகளிர் அணியின் அமைப்பாளர் - துணை - அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**சிவகாசி மாநகரம்**

**தலைவர் :** பிச்சைமணி, பள்ளப்பட்டி ரோடு, திருத்தங்கல், சிவகாசி.

**துணைத்தலைவர் :** பூமணி, முத்துமாரியம்மன் காலனி, பள்ளப்பட்டி ரோடு, திருத்தங்கல், சிவகாசி.

**அமைப்பாளர் :** சித்ரா, வெல்லஞ்சாமியார் தெரு, சிவகாசி.

**துணை அமைப்பாளர்கள் :** 1. பொன்செல்வி, தெய்வானை நகர், விஸ்வநத்தம் ரோடு, சிவகாசி. 2. முத்துலட்சுமி, வள்ளலார் தெரு, சிவகாசி. 3. காமிலா குரைசியா, சீதகாதி முஸ்லீம் தெரு, சிவகாசி. 4. தஸ்லீமா பானு, திருத்தங்கல். 5. ரெங்கலட்சுமி, வடக்கு ரத வீதி, திருத்தங்கல்.

**வலைதள பொறுப்பாளர் :** 1. வனிதா, வள்ளலார் தெரு, சிவகாசி. 2. திவ்யகுமாரி, கல்லறை தெரு, பி.கே.எஸ்.எ ஆறுமுகம் ரோடு, சிவகாசி.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 24.08.2024

**ஜெ. ஹெலன்டேவிட்சன்,**
செயலாளர்
தி.மு.க. மகளிர் அணி

---



காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ரெட்டமங்கலம் ஊராட்சியில் ஆதிதிராவிடர் மேல்நிலைப்பள்ளியில் க.சுந்தர் எம்.எல்.ஏ., மாணவ – மாணவிகளுக்கு மிதிவண்டி வழங்கினார். உடன் ஒன்றிய கழகச் செயலாளர் டி.குமார், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் கோ.சிவராமன், ஊராட்சி மன்ற தலைவர் சுஜாதா ஜெயராமன், ஒன்றிய குழு உறுப்பினர் நதியா கோபி, ஒன்றிய அவைத் தலைவர் என்.எஸ்.ரவி, கழக நிர்வாகிகள் பூபாலன், காத்தவராயன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சென்னை வடக்கு மாவட்டம், பெரம்பூர் வடக்குப் பகுதி, 35 வது வட்டம், மாவட்டப் பிரதிநிதி ஐ.சையது அலிகான் ஏற்பாட்டில் முகமது யூசுப் மற்றும் அபூர்வா ஆகிய இருவருக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. ஆட்டோ வழங்கினார். இதில் பெரம்பூர் வடக்கு பகுதிச் செயலாளர் அ.முருகன், மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.ஆர்.கமலக்கண்ணன், வட்டச் செயலாளர் எம்.உமாபதி, அப்துல்லா, ஆசிரியர் அய்யனார், ஆட்டோ இக்பால், நசீர், சாதிக், ஜாகிர் உசேன், சரவணன், ஆசிப், சபீர் அசிஸ் வாகிதா, யாஸ்மின், ஆயிஷா, கவிதா மற்றும் கழகத் தோழர்கள் பலர் உடன் உள்ளனர்.